Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 136 | உள்ளூர் - 16.05.2026 | சனி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 136 | வெளியூர் - 17.05.2026 | ஞாயிறு | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

எந்த ராசிக்கு எந்த பரிசு கொடுக்கனும்?

இந்திய ராணுவத்தில் 90 காலியிடங்கள்; +2

உஷார் மக்களே..! தொடங்கியது தென்மேற்கு பருவமழை!

பிரேக்-அப்? ரவி மோகன் பரபரப்பு பேட்டி!

## சிக்கிம் மாநிலம் உருவான தினம்: ஜனாதிபதி, பிரதமர் வாழ்த்து!



புதுடெல்லி, மே. 16–

சிக்கிம் மாநிலம் உருவான தினத்தை முன்னிட்டு, அம்மாநில மக்களுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் பதிவிட்டுள்ளார் அதில் தெரிவித்திருப்பதாவது:–

“மாநில தினத்தை முன்னிட்டு சிக்கிம் மக்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். தனது அற்புதமான இயற்கை அழகு, செழுமையான கலாச்சார பாரம்பரியம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் உள்ள வலுவான ஈடுபாடு ஆகியவற்றால், சிக்கிம் தேசத்திற்கான நிலையான வளர்ச்சியின் ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. சிக்கிம் மக்கள் தங்களின் அன்பான பண்பு, எளிமை மற்றும் நல்லிணக்க உணர்விற்காக அறியப்படுகிறார்கள். மாநிலமும் அதன் மக்களும் தொடர்ந்து செழிக்கட்டும்.” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் பிரதமர் மோடியும் வாழ்த்து தெரிவித்துள்ளார் அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:–

‘என் சகோதர சகோதரிகளுக்கு அவர்களின் மாநில தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவின் வளர்ச்சிக்கு சிக்கிமின் பங்களிப்பு பெரிதும் மதிக்கப்படுகிறது. மாநில மக்கள் நல்ல ஆரோக்கியத்துடனும் செழிப்புடனும் வாழ வாழ்த்துகிறேன்.

சிக்கிம் தனது 50–வது மாநில தினக் கொண்டாட்டங்களைக் கொண்டாடும் வேளையில் இந்த நல்வாய்ப்பு அமைந்துள்ளது. சில நாட்களுக்கு முன்பு, அந்தக் கொண்டாட்டங்களில் சிக்கிம் மக்களுடன் கலந்துகொள்ளும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சிக்கிமில் நான் பெற்ற அன்பான வரவேற்பு என் நினைவில் என்றும் நிலைத்திருக்கும். வரும் காலங்களிலும் சிக்கிமின் வளர்ச்சிப் பாதைக்கு மத்திய அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும்.’ இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைமைசெயலகத்தில் நாற்காலியில் வெள்ளை துண்டை அகற்றிய முதல்-அமைச்சர் விஜய்!




சென்னை, மே. 16–

தமிழகத்தின் புதிய முதல்–அமைச்சராக பொறுப்பேற்றுள்ள தவெக தலைவர்ஜோசப் விஜய், தனது அதிரடி நேர மேலாண்மை (Time Management) மூலம் தலைமை செயலக அதிகாரிகளைப் பிரமிக்க வைத்துள்ளார்.

ஒரு சாதாரண அரசு ஊழியரைப் போலத் தினமும் காலையிலேயே தலைமைச் செயலகத்திற்கு வருவது மட்டுமின்றி, மதிய உணவையும் வீட்டிலிருந்தே கையோடு தூக்கிக்கொண்டு வந்து சாப்பிடும் அவரது எளிய வழக்கம் தற்போது தலைமைசெயலக வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. முதல்–அமைச்சர் விஜய்யின் இந்த அதிரடி ஒழுங்குமுறை, அங்குள்ள மூத்த ஐஏஎஸ் (IAS) அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் பணியில் உள்ள போலீசாரிடையே பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

திரைத்துறையில் துல்லியமான டைம் மேனேஜ்மெண்ட்க்கு பெயர்பெற்ற விஜய், தற்போது அரசியல் மற்றும் அரசு நிர்வாகத்திலும் அதே பாணியைக் கடைப்பிடித்து வருகிறார். பதவியேற்ற நாள் முதல் இன்று வரை அவர் தலைமைச்செயலகத்திற்கும் வரும் நேரங்களின் பட்டியல் அதிகாரிகளை அதிர வைத்துள்ளது.

முந்தைய ஆட்சிக்காலங்களில் முதலமைச்சர்கள் கோட்டைக்கு வரும் நேரமும், அதற்கான போக்குவரத்து கட்டுப்பாடுகளும் பொதுமக்களுக்குப் பெரும் சவாலாக இருந்தன. ஆனால், முதல்–அமைச்சர் விஜய் முன்பாகவே தலைமை செயலகத்திற்கு வந்து விடுவதால் பொதுமக்களுக்கு எவ்வித போக்குவரத்து இடையூறும் ஏற்படுவதில்லை. ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்துகொண்டு, எந்தவித பந்தாவும் இன்றி அரசு ஊழியர் போல் நேரத்தோடு வருவது, மதிய உணவை பாக்ஸில் எடுத்து வந்து சாப்பிடுவது போன்ற எளிய செயல்களைப் பார்த்துத் தலைமைச் செயலக மூத்த அதிகாரிகளும், பாதுகாப்புப் பணியில் இருக்கும் போலீசாரும் தங்களது வியப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் மற்றொரு வியப்பாக நாற்காலியில் வெள்ளை துண்டு போடும் கலாசாரத்தை முதல்–அமைச்சர் விஜய் முடிவுக்கு கொண்டு வந்துள்ளார். அதிகாரத்தின் அடையாளமான டவள் கல்ட்சர் (Towel Cul–ture–ஐ) பின்பற்ற கூடாது என கோரிக்கைகள் வைக்கப்பட்ட நிலையில் வெள்ளை துண்டை முதல்–அமைச்சர் அகற்றியுள்ளார் என்பது தலைமைச்செயலக வளாகத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## தமிழக அமைச்சரவை விரிவாக்கம்: கூட்டணி கட்சிகளுக்கு?



சென்னை, மே. 16–

தமிழகத்தில் நடைபெற்ற 17–வது சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று, புதிய முதல்–அமைச்சராக ஜோசப் விஜய் கடந்த 10–ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) பொறுப்பு ஏற்றுக்கொண்டார். அவருடன் என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஏ.செங்கோட்டையன் உள்பட 9 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர்.

தமிழக வெற்றிக் கழகத் தலைவரும், முதல்–அமைச்சருமான ஜோசப் விஜய், விக்கிரவாண்டியில் நடைபெற்ற கட்சியின் முதல் மாநாட்டிலேயே, த.வெ.க.வுடன் கூட்டணி அமைப்போருக்கு ஆட்சியில் பங்கு தரப்படும் என்று அறிவித்து இருந்தார்.

அதன்படி, தேர்தலுக்கு பின்பு கூட்டணியில் இணைந்த காங்கிரஸ் கட்சிக்கு அமைச்சரவையில் 2 இடங்கள் வழங்கப்படும் என்று தெரிகிறது. அதேபோல், அ.தி.மு.க.வில் இருந்து பிரிந்து ஆதரவு அளித்த எஸ்.பி.வேலுமணி அணியினருக்கு 5 இடங்கள் ஒதுக்கப்படும் என தெரிகிறது. தி.மு.க. கூட்டணியில் வெற்றி பெற்று, த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்துள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சியும் அமைச்சரவையில் ஒரு இடத்தை எதிர்பார்ப்பதால் அதுகுறித்தும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. அடுத்த 3 நாட்களில் இந்தப் பணிகளை எல்லாம் முடித்து, அமைச்சரவை பட்டியலை தயாரிக்க முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

17–வது சட்டசபையில் மொத்தம் 34 அமைச்சர்கள் இடம்பெறுவார்கள் என்று தெரிகிறது. அந்த வகையில், ஆளுங்கட்சியான த.வெ.க.வுக்கு அமைச்சரவையில் 26 இடங்கள் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. அமைச்சரவை முடிவு செய்யப்பட்ட பிறகு துறைகளும் ஒதுக்கப்படும்.

அதன்பின்னர், புதிய அமைச்சர்களுக்கு சென்னை கிண்டியில் உள்ள மக்கள் மாளிகையில் கவர்னர் அர்லேக்கர் பதவிப்பிரமாணம் செய்து வைப்பார். தொடர்ந்து, புதிய அரசின் முதல் சட்டசபை கூட்டம் கவர்னர் உரையுடன் ஆரம்பமாகும். கவர்னர் உரை நிகழ்த்தி முடித்ததுடன், அடுத்த 3 நாட்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெறும். இந்த விவாதத்தில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவார்கள். நிறைவு நாளில் முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் பதில் உரை வழங்குவார்.

அதன்பின்னர், 2026–27–ம் ஆண்டுக்கான பட்ஜெட் தமிழக சட்டசபையில் தாக்கல் செய்யப்படும். கடந்த தி.மு.க. ஆட்சியில் பொது பட்ஜெட், வேளாண் பட்ஜெட் என்று தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், இந்த முறை ஒரே பட்ஜெட்டாக இருக்குமா, அல்லது வேளாண்மைக்கும் தனியாக தாக்கல் செய்யப்படுமா என்பது இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை. பட்ஜெட்டுக்கு பிறகு அதன் மீதான விவாதம் நடைபெறும். தொடர்ந்து, நிதி அமைச்சர் பதில் உரை வழங்குவார். அதன்பிறகு, துறைகள் வாரியாக மானியக் கோரிக்கை விவாதம் நடைபெறும். எப்படியும், 40 நாட்களுக்கு குறையாமல் சட்டசபை கூட்டம் நடைபெறும் என்பதால், புதிய அரசு எப்படி செயல்படப்போகிறது என்ற எதிர்பார்ப்பு எதிர்க்கட்சிகளையும் தாண்டி, பொதுமக்களிடமும் இருக்கிறது.

## மிகப்பெரிய குட்நியூஸ்..!

# வங்கிகளில் பணத்தை சேமித்து வைத்திருப்போருக்கு! மத்திய அரசின் முக்கிய முடிவு..!

### வரலாற்று ரீதியாக குறைந்த “வாராக்கடன்”







புதுடெல்லி, மே. 16–

2025–26 நிதியாண்டு பொதுத்துறை வங்கிகளுக்கு (PSBs) மிகவும் முக்கியமான ஒன்றாக அமைந்துள்ளது. இம்முறை, வங்கிகளின் இருப்புநிலைக் குறிப்புகளைச் (balance sheets) சீரமைப்பதிலும், நிலுவைத் தொகைகளை வசூலிப்பதிலும் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டில் கடன் தள்ளுபடிகள் (loan write–offs) மிகக் குறைந்த அளவை எட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. வங்கித் துறை சார்ந்த கலைச்சொற்க ளில், “கடன் தள்ளுபடி” (write–off) என்பது, வசூலிப்பது கடினம் எனக் கருதப்படும் கடன்களை வங்கிக் கணக்குகளிலிருந்து நீக்குவதைக் குறிக்கிறது.

பேங்க் ஆஃப் பரோடா, பஞ்சாப் நேஷனல் பேங்க் மற்றும் யூனியன் பேங்க் போன்ற முக்கியப் பொதுத்துறை வங்கிகள், கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்த அளவிலான கடன் தள்ளுபடிகளைப் பதிவு செய்துள்ளன. இதன் பொருள் என்னவென்றால், வங்கிகளின் வாராக் கடன்கள் குறைந்து வருகின்றன;

அதேவேளையில், நிலுவைத் தொகைகளை வசூலிக்கும் செயல்பாடு மேம்பட்டு வருகிறது.

பொதுத்துறை வங்கிகளின் நிதி நிலைமை வலுவடைந்து வருவது, பொதுமக்களின் வைப்புத்தொகைகளை (de–posits) மேலும் பாதுகாப்பானதாக மாற்றுகிறது. வங்கிகள் மீதான நிதி நெருக்கடி குறைந்து வருவதால், எதிர்காலத்தில் கடன் வழங்குவது எளிதாக அமையக்கூடும். இது வணிக நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்புக்கான வாய்ப்புகள் மீதும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர். மறுபுறம், வங்கிகளைக் காப்பாற்றுவதற்காக அரசாங்கம் ஏற்க வேண்டிய கூடுதல் நிதிச்சுமையும் இதன் மூலம் குறையும்.

இதற்கான முக்கியக் காரணமாக, வங்கிகளில் புதிதாக உருவாகும் வாராக் கடன்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதே கூறப்படுகிறது. வங்கித் துறையில், இவை “ஸ்லிப்பேஜஸ்” (slippages) என்று அழைக்கப்படுகின்றன. கடன் வாங்கியவர்கள் உரிய நேரத்தில் தவணைகளைச் செலுத்தத் தவறும்போது, அக்கடன்களைத் திரும்பப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கும் பட்சத்தில், வங்கிகள் அக்கடன்களைத் தங்கள் கணக்குகளிலிருந்து நீக்கிவிடுகின்றன. இதுவே “கடன் தள்ளுபடி” (write–off) செயல்முறையாகும்.

ICRA–வின் துணைத் தலைவர் சச்சின் சச்தேவா அவர்களின் கூற்றுப்படி, கடந்த சில ஆண்டுகளாகப் பொதுத்துறை வங்கிகள் நிலுவைத் தொகைகளை வசூலிப்பதில் சிறந்த கொள்கைகளைச் செயல்படுத்தி வருகின்றன. புதிதாக உருவாகும் வாராக் கடன்கள் குறைந்திருப்பதாலும், பழைய நிலுவைத் தொகைகள் திறம்பட வசூலிக்கப்படுவதாலும், கடன் தள்ளுபடிகளின் அளவு குறைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பேங்க் ஆஃப் பரோடா இந்த ஆண்டில் சுமார் ரூ. 6,330 கோடி மதிப்பிலான கடன்களைத் தள்ளுபடி செய்துள்ளது; இது 2018–ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான மிகக் குறைந்த அளவாகும். பேங்க் ஆஃப் இந்தியா ரூ. 5,735 கோடி மதிப்பிலான கடன்களைத் தள்ளுபடி செய்துள்ளது; இது 2016–ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான மிகக் குறைந்த அளவாகும். இந்தியன் பேங்க் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் போன்ற நிறுவனங்களின் நிதி நிலைமையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா ரூ. 1,718 கோடி மதிப்பிலான கடன்களைத் தள்ளுபடி செய்துள்ளது. இது 2022–ஆம் ஆண்டிற்குப் பிறகு எட்டப்பட்ட மிகக் குறைந்த அளவாகும். நிதியமைச்சகத்தின் தகவலின்படி, பொதுத்துறை வங்கிகளின் மொத்த வாராக்கடன் (Gross NPA) மார்ச் 31, 2026 நிலவரப்படி 1.93 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது வரலாற்று ரீதியாகவே மிகக் குறைந்த அளவாகும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## தேர்தல் தோல்வி - மு.க.ஸ்டாலின் ஆலோசனை!



சென்னை, மே. 16–

நடந்து முடிந்த தமிழக சட்டசபை தேர்தலில் ஆளுங்கட்சியாக இருந்த திமுக 200–க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறும் என்று கணிக்கப்பட்டிருந்த நிலையில், யாரும் எதிர்பார்த்திராத வகையில், வெறும் 59 இடங்களில் மட்டுமே கைப்பற்றியது.

அதிர்ச்சியளிக்கும் விதமாக திமுக தலைவரும் முதல்–அமைச்சருமான மு.க. ஸ்டாலின், அவர் போட்டியிட்ட கொளத்தூர் தொகுதியில் தவெக வேட்பாளர் வி.எஸ். பாபுவிடம் தோல்வியடைந்தார். தமிழ்நாட்டில் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைத்துள்ளது.

இந்நிலையில் தேர்தல் தோல்விக்கான காரணம் குறித்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

திமுகவின் தோல்விக்கான காரணங்கள், தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட 36 பேர் கொண்ட குழுவுடன் ஆலோசனை செய்து வருகிறார்.

முன்னதாக, தோல்வி தொடர்பாக திமுகவினரிடம் கருத்துக்கேட்பதற்காக ‘உடன்பிறப்பின் குரல்’ என்ற புதிய வலைதளப் பக்கத்தை ஸ்டாலின் அறிமுகப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 16.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 02-ம் தேதி

# நீட்-யுஜி தேர்வு;இனி இணையவழி வடிவத்தில்!




மீண்டும் ஒரு முறை நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டு இருக்கிறது. இளம் வயது முதலே மருத்துவ கனவுகளுடன் படித்து வரும் மாணவர்களின் கடின உழைப்பை மோடி அரசு மீண்டும் ஒருமுறை சிதைத்து இருக்கிறது. கடந்த 3ம் தேதி நடந்த நீட் தேர்வில் வினாத்தாள் கசிந்தது உறுதி செய்யப்பட்டதால், அந்தத் தேர்வை ரத்து செய்வதாக அறிவித்து, தேர்வு எழுதிய 23 லட்சம் மாணவர்களையும், அதற்காக இரவு, பகல் பாராது உழைத்த குடும்பத்தினரின் கனவையும் உருக்குலைத்து இருக்கிறது

மோடி அரசுநாடு முழுவதும் கடந்த 3ம் தேதி நீட் தேர்வு முடிவடைந்த நிலையில், ராஜஸ்தான் மற்றும் உத்தரகாண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் வினாத்தாள் கசிந்ததாக புகார்கள் எழுந்தன. சமூக வலைதளங்களில் ஒரு ரகசிய வினாத்தாள் பரவியது கண்டுபிடிக்கப்பட்டது. அதில் இருந்த 180 கேள்விகளில் 140 கேள்விகள் அசல் வினாத்தாளுடன் அப்படியே ஒத்துப்போனது. இதையடுத்து நீட் தேர்வை ரத்து செய்வதாக தேசிய தேர்வு முகமை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு முதல் நீட் தேர்வு முறை அமலுக்கு வந்த பிறகு, நாடு முழுவதும் நடத்தப்பட்ட தேர்வு முறைகேடு காரணமாக ரத்து செய்யப்படுவது இது இரண்டாவது முறை ஆகும். இதற்கு முன்பு 2024ல் நீட் தேர்வு வினாத்தாள் கசிந்ததால் மே 5ஆம் தேதி நடந்த தேர்வும் அப்போது ரத்து செய்யப்பட்டது. அப்போது பீகார் மாநிலம் பாட்னாவில் வினாத்தாள் கசிந்தது கண்டுபிடிக்கப்பட்டது. குறிப்பாக 2024 ஜூன் 4 அன்று நீட் தேர்வு முடிவுகள் வெளியானதும் சர்ச்சை வெடித்தது. மொத்தம் 67 தேர்வர்கள் 720–க்கு 720 என்ற முழுமையான மதிப்பெண்ணைப் பெற்றிருந்தனர். இது மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பயிற்சி மையங்கள் மத்தியில் பல கேள்விகளை எழுப்பியது. இதற்கு குறிப்பிட்ட சில தேர்வு மையங்களில் தேர்வு எழுதுவதற்கான நேரத்தை இழந்ததாகக் கூறப்படும் தேர்வர்களுக்கு வழங்கப்பட்ட கருணை மதிப்பெண்களே காரணம் என்று தேசிய தேர்வு முகமை சப்பை கட்டு கட்டினாலும் பல மாநிலங்களில் போராட்டம் வெடித்ததால் அப்போது நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டது. சிபிஐ விசாரணை நடத்தியது. முடிவில் ஜார்கண்ட் மாநிலம் ஹசாரிபாகில் உள்ள ஓயாசிஸ் பள்ளி மையத்திலிருந்தே வினாத்தாள் வெளியானது தெரிய வந்தது. இதையடுத்து நீட் தேர்வை ரத்து செய்து விட்டு மறுதேர்வை நடத்தியது மோடி அரசு. மேலும் வினாத்தாள் வெளியான விவகாரத்தில் சிக்கினால் 10 ஆண்டுகள் சிறை மற்றும் 1 கோடி ரூபாய் அபராதம் என 2024ம் ஆண்டு சட்டத்திருத்தம் செய்தது. இதுதொடர்பாக வழக்கு இன்னும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த சூழலில் 2026 நீட் தேர்விலும் வினாத்தாள் கசிந்து, தேர்வு ரத்து செய்யப்பட்டு இருப்பது மோடி அரசு மீதான நம்பகத்தன்மை, தேர்வு நடத்தும் தன்மை குறித்த கேள்விகளை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் எழுப்பி உள்ளது. மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் நகரில் இருந்து வினாத்தாள் கசிந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நீட் வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகளை தடுக்கும் வகையில், அடுத்த ஆண்டு முதல் நீட்–யுஜி (NEET–UG) தேர்வு கணினி வழித் தேர்வு (CBT) என்ற இணையவழி வடிவத்திற்கு மாற்றப்படும் என மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான்உறுதிப்படுத்தினார்.வினாத்தாள் கசிவு குற்றச்சாட்டுகளின் காரணமாக முதல் தேர்வு ரத்துசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, புதிய நீட்–யுஜி தேர்வு ஜூன் 21 அன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான், அடுத்த ஆண்டு முதல் இணையவழித் தேர்வு முறை: வெளிப்படையான, பாதுகாப்பான

மற்றும் மோசடி இல்லாத தேர்வு முறையை உறுதி செய்வதற்காக, ஓஎம்ஆர்தாள்களுக்குப் பதிலாக கணினி அடிப்படையிலான தேர்வு (CBT) முறை செயல்படுத்தபபடும் என அறிவித்துள்ளார். இது வரவேற்க தக்கது இந்த வரும் காலங்களில் இது போன்ற சம்பவங்கள் வகைகள் தடுக்கும் வகையில் இருத்தல் மாணவர்களும் பெறோர்களும் நிம்மதியடைவர் .எதிர்க்கட்சிகளும் தேர்வை வைத்து அரசியல் செய்யாமல் இருப்பார்கள்.

# இஸ்ரேல் - லெபனான் சண்டை நிறுத்தம் மேலும் 45 நாட்களுக்கு நீட்டிப்பு!



வாஷிங்டன், மே. 16–

இஸ்ரேல், அமெரிக்கா இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலை தொடர்ந்து மத்திய கிழக்கில் பதற்றம் ஏற்பட்டது. அதேவேளை, இந்த மோதலில் ஈரானுக்கு ஆதரவாக லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா கிளர்ச்சி அமைப்பு இஸ்ரேல் மீது மார்ச் 1ம் தேதி முதல் தாக்குதல் நடத்தியது. இதையடுத்து, மார்ச் 2ம் தேதி முதல் லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பு மீது இஸ்ரேல் அதிரடி தாக்குதல் நடத்தியது. ஹிஸ்புல்லா ஆதிக்கம் செலுத்திய பகுதிகளில் தொடர் தாக்குதல் நடத்தியது. மார்ச் 2ம் தேதி முதல் மே 15ம் தேதி வரை நடைபெற்ற தாக்குதலில் லெபனானில் ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் உள்பட சுமார் 3 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அதேவேளை, ஹிஸ்புல்லா கிளர்ச்சிக்குழுவினரை கட்டுப்படுத்துவதாகவும், ஹிஸ்புல்லா கிளர்ச்சிக்குழுவிடம் உள்ள ஆயுதங்களை முழுவதும் கைப்பற்றி அந்த அமைப்பை முழுவதும் ஒழிப்பதாகவும் இஸ்ரேலுக்கு லெபனான் அரசு உத்தரவாதம் அளித்தது. அதன் அடிப்படையில் இஸ்ரேல் – லெபனான் சண்டை நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த சண்டை நிறுத்த ஒப்பந்தம் வரும் ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைய உள்ளது. இந்நிலையில், இஸ்ரேல் – லெபனான் சண்டை நிறுத்த ஒப்பந்தம் மேலும் 45 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா தலைநகர் வாஷிங்டனில் நடைபெற்ற இஸ்ரேல் – லெபனான் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையில் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மேலும் 45 நாட்களுக்கு நீட்டிக்க ஒப்பக்கொள்ளப்பட்டுள்ளது. அதேவேளை, ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவினர் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தும் என இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சேலம் கோட்டத்தில் இருந்து 200 சிறப்பு பஸ்கள் இயக்கம்!




சேலம், மே. 16–

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக சேலம் கோட்டத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் வார விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களில் பல்வேறு வழித்தடங்களில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அதன்படி கோடை விடுமுறை, அமாவாசையையொட்டி பொதுமக்களின் வசதிக்காக இன்று (சனிக்கிழமை) முதல் நாளை மறுநாள் (திங்கட்கிழமை) வரை சேலம் கோட்டத்தில் பல்வேறு வழித்தடங்களில் 200 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. சேலம் புதிய பஸ்நிலையம், பெங்களூரு, சென்னை, ஒசூர், கோவை, திருப்பூர், திருவண்ணாமலை மற்றும் சிதம்பரம் பஸ் நிலையங்களில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

சென்னை–பெங்களூரு

அதேபோல், சென்னையில் இருந்து சேலம், நாமக்கல், ஒசூர், தர்மபுரி மற்றும் மேட்டுருக்கும். சேலத்தில் இருந்து சென்னை, மதுரை, சிதம்பரம், காஞ்சீபுரம், பெங்களூருவுக்கும். பெங்களூருவில் இருந்து, சேலம், திருவண்ணாமலை, திருச்சி, மதுரை, கோவை, ஈரோடு மற்றும் திருப்பூருக்கும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. மேலும், ஒசூரில் இருந்து சேலம், சென்னை, புதுச்சேரி, கடலூர், திருச்சி, மதுரை, கோவை மற்றும் திருப்பூருக்கும்.

நாமக்கல்லில் இருந்து சென்னைக்கும், திருவண்ணாமலை மற்றும் ஈரோட்டில் இருந்து பெங்களூருவுக்கும், திருச்சியில் இருந்து ஒசூருக்கும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

# தமிழ்நாட்டில் கோடை வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்கும்!



சென்னை, மே. 16–

தமிழ்நாட்டில் கோடை காலம் தற்போது இருந்தாலும், சமீப நாட்களாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இதனால் வெப்பத்தின் தாக்கம் குறைந்து காணப்படுகிறது. இந்த சூழலில் தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி அதே இடத்தில் நிலவுகிறது என்றும், மேலும் தென்மேற்கு பருவமழை தெற்கு வங்கக்கடலின் சில பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகள், அந்தமான் மற்றும் நிகோபர் தீவு பகுதிகளில் (சனிக்கிழமை) தொடங்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்த நிகழ்வுகள் காரணமாக தென்மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் மிதமான மழையும், விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கனமழையும் இன்று பெய்ய வாய்ப்புள்ளது. மே. 16 (ஞாயிற்றுக்கிழமை) தமிழ்நாடில் சில இடங்களிலும், புதுச்சேரியிலும் மிதமான மழையும், திண்டுக்கல், தேனி, கோவை, நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என ஆய்வு மையம் கூறியிருக்கிறது. பொதுவாக தென் மேற்கு பருவமழை கேரளாவில் ஜூன் முதல் வாரத்தில் தொடங்குவதையே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அந்த வகையில் கேரளாவில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை முன்னதாகவே அதாவது வருகிற 26–ந்தேதி உருவாகுவதற்கான வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வாளர்கள் கணித்திருக்கின்றனர்.

கோடை மழை கடந்த சில நாட்களாக பெய்த சூழலில், வருகிற 18–ந்தேதியில் (திங்கட்கிழமை) இருந்து தமிழ்நாட்டில் மீண்டும் கோடை வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்க இருப்பதாக வானிலை ஆய்வாளர் டெல்டா வெதர்மேன் ஹேமச்சந்தர் தெரிவித்தார்.

# காங்கோவில் தீவிரமாக பரவும் எபோலா வைரஸ் - 65 பேர் உயிரிழப்பு!




கின்சாஹா, மே. 16–

ஆப்பிரிக்க நாடான காங்கோவில் எபோலா வைரஸ் நோய்(ரத்த இழப்பு சோகை காய்ச்சல்) தீவிரமாக பரவி வருகிறது. அந்நாட்டில் கடந்த 1976–ம் ஆண்டு முதல் முறையாக எபோலா வைரஸ் பரவல் கண்டறியப்பட்டது. அதன்பிறகு பலமுறை எபோலா வைரஸ் பரவல் ஏற்பட்ட நிலையில், தற்போது 17–வது முறையாக மீண்டும் காங்கோவில் எபோலா நோய்த்தொற்று பரவி வருகிறது.

இதற்கு முன்பு கடந்த 2018–ம் ஆண்டு ஏற்பட்ட எபோலா தொற்று பரவல் காரணமாக காங்கோவில் சுமார் 1,000 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள எபோலா வைரஸ் பரவலால் இதுவரை 65 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. குறிப்பாக காங்கோவின் இடூரி மாகாணத்தில் சுமார் 246 பேருக்கு தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

எபோலா வைரஸ் மிகவும் எளிதில் பரவக்கூடியது என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இது அரிதான நோய் தொற்றாக இருந்தாலும், பெரும்பாலும் உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு ஆபத்தான நோய்த்தொற்றாகும். எனவே, நோய் தொற்று தொடர்ந்து பரவுவதை தடுக்கும் வகையில், மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தவும், கண்காணிப்பை தீவிரப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கவும் அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காங்கோவில் ஏற்கனவே ஆயுதக்குழுக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வரும் நிலையில், அவர்களை கட்டுப்படுத்த அந்நாட்டு அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த சூழலில், அங்கு எபோலா வைரஸ் பரவல் அதிகரித்து வருவது அந்நாட்டிற்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தங்கம் விலை மேலும் குறைவு...!



சென்னை, மே. 16–

தங்கம் விலை சற்று குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.120 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,18,000–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.15 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,750–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. அதன்படி வெள்ளி விலை கிராமுக்கு ரூ.15–ம், கிலோவுக்கு ரூ.15 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் ரூ.290–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 90 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# பெட்ரோல்-டீசல் தட்டுப்பாடு: ஞாயிற்றுக்கிழமைகளில் பங்க்குகள் மூட முடிவு?



அமெரிக்கா, மே. 16–

அமெரிக்காவுடனான போர் பதற்றம் காரணமாக ஈரான் ஹார்முஸ் நீரிணையை மூடியுள்ளதால், இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் கொண்டு வருவதில் சிக்கல் நீடிக்கிறது. இதனால் பெட்ரோல்–டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயர்த்த ப்பட்டுள்ளது. இதற்கிடையே பெட்ரோல்–டீசல் பயன்பாட்டை குறைக்க பொதுமக்கள் பொது போக்குவரத்தை பயன்படுத்த வேண்டும்.

வாகனங்களில் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் குழுவாக இணைந்து பயணிக்க வேண்டும் என பிரதமர் மோடி சமீபத்தில் வேண்டுகோள்விடுத்து இருந்தார். இந்தநிலையில், மோடியின் வேண்டுகோளை ஏற்று, எரிபொருளை பாதுகாக்க ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பெட்ரோல் பங்க்குகளை மூடுவதற்கு இந்திய பெட்ரோலிய டீலர்கள் சங்க செயற்குழு முடிவெடுத்து உள்ளதாகவும், தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளம், மராட்டியம், ஆந்திரா, தெலுங்கானா மற்றும் அரியானாவில் இந்த நடைமுறை அமல்படுத்தப்படும் என்றும் ஒரு தகவல் சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுவது போன்ற இந்த தகவலை பலரும் பகிர்ந்து வருவதோடு, விமர்சித்தும் கருத்து தெரிவித்தும் வருகின்றனர். இதையடுத்து இந்த விவகாரம் தொடர்பாக மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலகம் வெளியிட்டுள்ள சமூக வலைத்தள பதிவில் "ஞாயிற்றுக்கிழமைகளில் பெட்ரோல் பங்க்குகள் மூடப்படும் என்று பரவும் தகவல் தவறானது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# எந்த ராசிக்கு எந்த பரிசு கொடுக்கனும்.?! உங்களை நேசிப்பவருக்கு ஏற்ற சரியான கிஃப்ட் இதுதான்.!



நமக்கு புடிச்சவங்களுக்கு நாம் தேடி தேடி பார்த்து வாங்கும் பரிசு அவங்களுக்கு புடிச்ச மாதிரி இருக்கனும்தானே. அதனை சிறப்பா தேர்ந்தெடுத்து கொடுக்கும் போது கொடுப்பவர்களுக்கும் அதனை பெறுவர்களுக்கும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் பல மடங்கு அதிகரிக்கும். பரிசு கொடுப்பது என்பது வெறும் பொருளை பரிமாறுவது மட்டுமல்ல, அந்த பரிசு மூலம் உள்ளத்தில் உள்ள பாசம், அக்கறை, நினைவு ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஒரு வழிமுறையாகும். ஆனால் பெரும்பாலும் எந்த பரிசு கொடுத்தால் பிடிக்கும்? என்ற குழப்பம் எல்லோருக்கும் வரும். அதற்கு ஒரு தனித்துவமான வழிகாட்டுதலாக ஜோதிடம் உதவுகிறது. ஒவ்வொரு ராசிக்காரரின் தனித்துவ குணாதிசயங்களைப் பொருத்து பரிசுகளைத் தேர்ந்தெடுத்தால் அந்த பரிசு மனதில் நிலையான மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

**அக்கினி ராசிகள் (மேஷம், சிம்மம், தனுசு)**

அக்கினி ராசிகளான மேஷம், சிம்மம் மற்றும் தனுசு ராசியினர் உற்சாகமும் சாகச உணர்வும் நிறைந்தவர்கள். சாமான்யமான பொருட்களை விட அனுபவத்தை தரும் பரிசுகளை விரும்புவார்கள். உதாரணமாக டிராவல் பாஸ், அட்வென்ச்சர் ட்ரிப், ஜிம் மெம்பர்ஷிப் அல்லது சுவாரஸ்யமான கேம்கள். இவர்களுக்கு பரிசளிக்கும் போது ஆச்சரியத்தைத் தரும் வகையில் இருந்தால் அது அவர்களின் மனதை கவரும். இது போன்ற பரிசுகளை வழங்கி இந்த 3 ராசிகளையும் ஆச்சரியப்படுத்தலாம்.

**பூமி ராசிகள் (ரிஷபம், கன்னி, மகரம்)**

பூமி ராசிகள் எனப்படும் ரிஷபம், கன்னி மற்றும் மகரம் ராசியை சேர்ந்தவர்கள் நடைமுறை சிந்தனை கொண்டவர்கள். அவர்களுக்கு தரமான, நீடித்த மற்றும் வசதியான பொருட்களே பிடிக்கும். அழகிய வாட்ச், கம்பீரமான டைரி, ஹோம் டெகார் பொருட்கள், ஆர்கானிக் உணவுப் பொருட்கள் போன்றவை இவர்களின் விருப்ப பட்டியலில் இருக்கும். கம்பீரம் மற்றும் நம்பகத்தன்மை என்ற சொல்லே இவர்களின் பரிசு தேர்வை விவரிக்கும். எப்போதுமே பொருட்களின் மதிப்பை விட கொடுப்பவர்களை பொறுத்தே அதன் மகிழ்ச்சி அமையும் என்பது இந்த ராசியினரின் விருப்பமாக இருக்கும்.

**காற்று ராசிகள் (மிதுனம், துலாம், கும்பம்)**

காற்று ராசிகளான மிதுனம், துலாம் மற்றும் கும்பம் ராசியினருக்கு புத்தகங்கள், அறிவை வளர்க்கும் பொருட்கள், புதிய தொழில்நுட்ப சாதனங்கள் போன்றவற்றில் ஆர்வம் அதிகமாக இருக்கும். புதுமையை விரும்பும் இவர்களுக்கு இசை கருவிகள், பேஷன் பொருட்கள், ஆன்லைன் கற்கை நெறிகள் அல்லது கலை சார்ந்த பரிசுகள் மிகவும் பொருத்தமானவை. இவர்களின் கற்பனைக்கு வண்ணம் சேர்க்கும் பரிசுகளை கொடுத்தால் அவர்கள் மனம் மலர்ந்து போகும்.

**நீர் ராசிகள் (கடகம், விருச்சிகம், மீனம்)**

நீர் ராசிகளான கடகம், விருச்சிகம் மற்றும் மீன ராசியினர் உணர்ச்சி மிக்கவர்கள். நினைவுகளைச் சுமக்கும் பரிசுகளே இவர்களை கவரும். புகைப்பட ஆல்பம், ஹேண்ட்மேட் கிஃப்ட்ஸ், ஆன்மீக பொருட்கள் அல்லது மெலோடிக் இசை சிடி போன்றவை இவர்களை மகிழ்விக்கும். உணர்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் பரிசுகள் இவர்களுக்கு எப்போதும் சிறந்தவை.

**மனதை புரிந்துகொண்டால் பரிசு இனிக்கும்.!**

ஒரு ராசிக்காரரின் மனதையும் குணத்தையும் புரிந்து கொண்டு பரிசு தேர்வு செய்வது, வெறும் பரிசளிப்பு செயலாக இல்லாமல், உள்ளங்களைக் கவரும் உண்மையான பிணைப்பை உருவாக்குகிறது. நட்சத்திரங்கள் சொல்வதை நம்பினால், ராசிக்கேற்ப பரிசு கொடுப்பது உறவுகளை மேலும் உறுதியானதாக மாற்றும்.

# "பொதுமக்களை நாற்காலியில் அமரவைத்துதான் பேச வேண்டும்"- பத்திரப் பதிவுத்துறை உத்தரவு!




சென்னை, மே. 16–

பொதுமக்கள் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு வரும்போது அவர்களை அதிகாரிகள் நடத்தும் விதம் குறித்து பதிவுத்துறைத் தலைவர் அனைத்து மாவட்டப் பதிவாளர்களுக்கும் அதிரடி சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளைச் சார் பதிவாளரிடமோ அல்லது அங்கு பணிபுரியும் உதவியாளர்கள் / இளநிலை உதவியாளர்களிடமோ சமர்ப்பிக்க வரும்போது, அவர்களின் மேஜைக்கு முன்பாக கண்டிப்பாக நாற்காலிகள் போடப்பட்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு அலுவலரின் மேஜைக்கு முன்னாலும் பொதுமக்களுக்காகக் குறைந்தபட்சம் இரண்டு நாற்காலிகள் கண்டிப்பாகப் போடப்பட்டிருக்க வேண்டும். பொதுமக்களை நாற்காலியில் உட்கார வைத்துதான் சார்பதிவாளர்கள் மற்றும் ஊழியர்கள் பேச வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும், பொதுமக்கள் எவரையும் நிற்க வைத்துக்கொண்டு அதிகாரிகள் பதிலளிக்கக் கூடாது. இது தொடர்பாக ஏற்கனவே பல்வேறு உத்தரவுகளும், அறிவுரைகளும் ஆய்வுக் கூட்டங்களில் தொடர்ந்து வழங்கப்பட்டிருந்தாலும், தற்போது சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்யும்போது அத்தகைய நடைமுறை பல அலுவலகங்களில் பின்பற்றப்படவில்லை.




## அசைவப் பிரியர்கள் இதை அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்.!



இன்றைய வேகமான வாழ்க்கை முறையில், உயர் இரத்த அழுத்தம் என்பது அனைத்து வயது மக்களையும் பாதிக்கும் மிகப்பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. மருத்துவத் துறையில் இது 'மௌனக் கொலையாளி' (Silent Killer) என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், இது உடலில் இருந்தாலும், உடனடியாக எந்தவிதமான அறிகுறிகளையும் வெளிப்படுத்துவதில்லை. ஆனால் இது மாரடைப்பு, சிறுநீரகச் செயலிழப்பு மற்றும் பக்கவாதம் போன்ற உயிருக்கே ஆபத்தான பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும். பிரிட்டிஷ் இதய அறக்கட்டளையின் (British Heart Foundation) அறிக்கையின்படி, உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள், உயிருக்கு ஆபத்தான நிலைகளைத் தவிர்க்க, 4 வகையான உணவுகளை உடனடியாக உண்பதை நிறுத்த வேண்டும்.

**உப்பு: இரத்த அழுத்தத்தின் (BP) முக்கிய எதிரி:**

உயர் ரத்த அழுத்தத்திற்கு முக்கிய காரணம் நாம் உட்கொள்ளும் உப்பே ஆகும். உணவில் உப்பு அதிகமாக இருந்தால், இரத்த நாளங்களில் நீர் தேங்கி, இரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. இது இதயத்தின் மீது கூடுதல் சுமையை ஏற்படுத்துகிறது. சமையலில் உப்பின் அளவைக் குறையுங்கள். சாப்பிடும்போது தனியாக உப்பை எடுத்து வைத்துக்கொண்டு சேர்த்துச் சாப்பிடுவதை உடனடியாக நிறுத்துங்கள். சுவைக்காக எலுமிச்சைச் சாறு மற்றும் இயற்கையான நறுமணப் பொருட்களைப் பயன்படுத்துங்கள்.

**பதப்படுத்தப்பட்ட இறைச்சி;**

சாசேஜ்கள் (Sausages), ஹாட் டாக்ஸ் (Hot dogs) மற்றும் பேக்கன் (Bacon) போன்ற பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகள், இரத்த அழுத்தப் பிரச்சனை உள்ளவர்களுக்கு நச்சுத்தன்மை வாய்ந்தவை. இவை கெட்டுப்போகாமல் இருக்க, பெரும்பாலும் அதிகப்படியான உப்பு மற்றும் ரசாயனங்களைக் கொண்டு பதப்படுத்தப்படுகின்றன. அதற்குப் பதிலாக, புதிய இறைச்சி, மீன் மற்றும் முட்டைகளை மிதமான அளவில் உட்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

**சாஸ்கள் ஊறுகாய்கள்;**

ஊறுகாய்கள் நமது தெலுங்கு உணவுப் பண்பாட்டின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகும். ஆனால், இரத்த அழுத்தப் பிரச்சனை உள்ளவர்களுக்கு இவை மிகவும் ஆபத்தானவை. தக்காளி கெட்ச்அப், சோயா சாஸ் மற்றும் ஊறுகாய்களில் சோடியத்தின் அளவு மிக அதிகமாக உள்ளது. ஒரு சிறிய கரண்டி ஊறுகாயில், நீங்கள் ஒரு நாள் முழுவதும் உட்கொள்ள வேண்டிய உப்பின் அளவை விட இரண்டு மடங்கு உப்பு இருக்கும்.

**பேக்கரி உணவுகள் துரித உணவுகள் (Fast Food)**

பீஸ்ஸா, பர்கர், கேக் மற்றும் பிஸ்கட் போன்ற பேக்கரி உணவுகளில் உப்பு மட்டுமல்லாமல், ஆரோக்கியமற்ற கொழுப்புகளும் சர்க்கரையும் அதிக அளவில் உள்ளன. இவை உடல் எடை அதிகரிக்க வழிவகுக்கும். உடல் எடை அதிகரிப்பது, ஆபத்தான அளவில் உயர் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும். சோடா போன்ற மென்பானங்களையும் (Soft drinks) முழுமையாகத் தவிர்க்க வேண்டும்.

நாம் உண்ணும் உணவே நமது ஆரோக்கியத்தைத் தீர்மானிக்கிறது. நீங்கள் மருந்துகளை உட்கொண்டிருந்தாலும், உணவு தொடர்பான விதிமுறைகளைக் கடைப்பிடிக்காவிட்டால், அதனால் எந்தப் பயனும் இருக்காது. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட உணவுகளைத் தவிர்த்துவிட்டு, புதிய பழங்கள், காய்கறிகள் மற்றும் வீட்டில் சமைத்த உணவுகளை உட்கொள்வதன் மூலம் உங்கள் இதயத்தைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.






# வீட்டிலிருந்தே பணி.. உச்ச நீதிமன்றம் அதிரடி முடிவு..!



புதுடெல்லி, மே. 16–

பிரதமர் நரேந்திர மோடியின் வேண்டுகோளுக்கு இணங்க, எரிபொருள் மற்றும் ஆற்றல் நுகர்வைக் குறைக்கும் வகையில், உச்ச நீதிமன்றம் தனது செயல்பாடு மற்றும் ஊழியர்களின் பணி ஏற்பாடுகளில் முக்கிய மாற்றங்களை அறிமுகப்படுத்தும் புதிய சுற்றறிக்கையை வெள்ளிக்கிழமை வெளியிட்டது. இந்தப் புதிய நடவடிக்கைகளின்படி, வாரத்திற்கு இரண்டு முறை காணொளி வாயிலாக (virtual) வழக்கு விசாரணைகள் நடைபெறும்; மேலும், நேரடி விசாரணை நடைபெறும் நாட்களில் நீதிபதிகள் ஒரே வாகனத்தைப் பகிர்ந்துகொண்டு (car–pool) நீதிமன்றத்திற்கு வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மத்திய அரசு பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது; இது உடனடியாக அமலுக்கு வந்துள்ளது. அந்தச் சுற்றறிக்கையின்படி, உச்ச நீதிமன்றத்தில் திங்கள், வெள்ளி மற்றும் பிற குறிப்பிட்ட "இதர விசாரணை நாட்களில்" (miscellaneous days) நடைபெறும் வழக்கு விசாரணைகள் இனிமேல் காணொளி வாயிலாக மட்டுமே நடத்தப்படும். நீதிமன்றம் பகுதி நேரமாகச் செயல்படும் நாட்களிலும் வழக்கு விசாரணைகள் இணையம் வாயிலாகவே நடைபெறும்.

வழக்கு தொடர்ந்தவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாத வகையில், காணொளி வாயிலான விசாரணைக்கான இணைப்புகள் (links) உரிய நேரத்தில் பகிரப்படுவதையும், அதற்கான தொழில்நுட்ப ஏற்பாடுகள் வலுவாக இருப்பதையும் உறுதி செய்யுமாறு நீதிமன்ற நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எரிபொருள் சேமிப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்களுக்குள்ளேயே ஒரே வாகனத்தைப் பகிர்ந்துகொண்டு பயணிப்பதை (car–pooling) ஊக்குவிக்க முடிவு செய்துள்ளனர். இந்த ஏற்பாட்டின் கீழ், தேவைப்படும்போதெல்லாம் நீதிபதிகள் ஒரே வாகனத்தில் ஒன்றாகப் பயணம் செய்யலாம்.

நீதிமன்ற ஊழியர்களுக்கான முக்கிய மாற்றங்களையும் இந்தச் சுற்றறிக்கை அறிமுகப்படுத்துகிறது. உச்ச நீதிமன்றத்தின் ஒவ்வொரு பிரிவு மற்றும் துறையிலும் உள்ள ஊழியர்களில் 50 சதவீதம் பேர் வரை, வாரத்திற்கு இரண்டு நாட்கள் வீட்டிலிருந்தே பணியாற்ற அனுமதிக்கப்படுவார்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், நீதிமன்றப் பணிகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, எஞ்சிய ஊழியர்கள் அலுவலகத்திற்கு நேரில் வந்து பணியாற்ற வேண்டும்.

வீட்டிலிருந்தே பணியாற்ற அனுமதிக்கப்பட்ட ஊழியர்கள் அனைத்து நேரங்களிலும் தொலைபேசி வாயிலாகத் தொடர்பில் இருக்க வேண்டும் என்றும், தேவைப்படும்போதெல்லாம் உடனடியாக அலுவலகத்திற்கு வந்து பணியில் இணைய வேண்டும் என்றும் அந்தச் சுற்றறிக்கை மேலும் தெளிவுபடுத்துகிறது. அனைத்து அத்தியாவசியப் பணிகளும் உரிய நேரத்தில் நிறைவு செய்யப்படுவதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏதேனும் ஒரு பிரிவில் பணிச்சுமை அதிகமாக இருந்து, வீட்டிலிருந்தே பணியாற்றும் முறை அங்குப் பொருத்தமானதாகக் கருதப்படாவிட்டால், அந்தப் பிரிவில் வீட்டிலிருந்தே பணியாற்றும் ஏற்பாட்டை மாற்றியமைக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ சம்பந்தப்பட்ட பதிவாளருக்கு அதிகாரம் உண்டு என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சுற்றறிக்கையை உச்ச நீதிமன்றத்தின் பொதுச் செயலாளர் பாரத் பராஷர் வெளியிட்டார்.

## 'ஜனநாயகன்' திரைப்பட வழக்கு: 3 பேர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது!



சென்னை, மே 16–

தமிழ்நாடு முதல்– அமைச்சர் விஜய் நடித்துள்ள 'ஜனநாயகன்' படம் தணிக்கை வாரியத்தின் மறு ஆய்வு குழுவின் முன் ஆய்வில் உள்ளது. இந்தநிலையில், கடந்த ஏப்ரல் 3–ந்தேதி சட்டவிரோதமாக இந்த திரைப்படம் இணையதளத்தில் வெளியானது. இதுகுறித்து, பட தயாரிப்பு நிறுவனமான கே.வி.என். புரொடக்சன்ஸ் நிறுவனம் அளித்த புகாரின் அடிப்படையில், சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, இதுவரை 9 பேரை கைது செய்துள்ளனர். இந்நிலையில் இதில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் உதவி எடிட்டர் பிரசாந்த், செல்வம், பாலகிருஷ்ணன் ஆகிய 3 பேர் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் 'சைபர் கிரைம்' போலீசார் கைது நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

## மருத்துவ செலவுக்காக நிதியுதவி!



திருப்பூர், மே. 16–

திருப்பூர் வடக்கு காவல் துறையில் பணிபுரிந்த சக்தி எந்திரன் என்கின்ற காவலர் சொந்த ஊர் மதுரை சென்ற போது வாகன விபத்து ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் அவருக்கு அதிமுக புதிய பேருந்து நிலையம் பகுதி செயலாளர் வானவில் கனகராஜ் அவர்க ளிடம் உதவி கேட்டுக் கொண்டதன் பேரில் மருத்துவ செலவுக்காக தனது சொந்த நீதி 10.000 ரூபாய் வழங்கினார் மேலும் உதவி செய்ய விருப்பம் உள்ளவர்கள் அவர்களது குடும்பத்தினரை அணுகி உதவி செய்யலாம் என தெரிவித்தார். செல் நம்பர் 9363112418 நம்பரை தொடர்பு கொள்ளவும்



ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் கே. கே. ஆனந்த் மோகன் போட்டியிட்டார். அவர் 22 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் அமைச்சர் சு முத்துசாமியை வீழ்த்தி வெற்றி பெற்றார். சென்னை தலைமைச் செயலகத்தில் எம்எல்ஏ வாக பதவியேற்ற பின் முதல் முறையாக ஈரோடு வந்த அவர் ஈரோடு மாவட்ட ஆட்சி தலைவர் ச கந்தசாமி, ஐ ஏ எஸ்.., அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்து சால்வை அணிவித்து மலர்க்கொத்து வழங்கினார். பின்னர் "கடவுள் ஆகினும் ஆக" என்கிற புத்தகத்தை மாவட்ட ஆட்சியருக்கு நினைவு பரிசாக வழங்கினார்.



திருப்பூர் புறநகர் மாவட்ட அ.தி.மு.க. பல்லடம் சட்டமன்ற தொகுதி ஆலோசனை கூட்டம் புதிதாக புறநகர் மாவட்ட செயலாளராக பொறுப்பேற்றுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவசாமி தலைமையில் பல்லடத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது கட்சி நிர்வாகிகள் சால்வை அணிவித்து அவருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர். இதில் பல்லடம் முன்னாள். எம்.எல்.ஏ., கரைப்புதூர் நடராஜன், அதிமுக அவைத்தலைவர் சிவாச்சலம், மாவட்டத் துணைச் செயலாளர் ராமமூர்த்தி, மாநில அம்மாவை துணைச் செயலாளர் புத்தெரிச்சல் பாபு, கழக வழக்கறிஞர் துணைச் செயலாளர் வெங்கடாசலம் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பட்ஜெட்டில் அறிவித்த பிறகே பெண்களுக்கு ரூ.2,500 வழங்கப்படும் - அமைச்சர் நிர்மல்குமார்!




சென்னை, மே. 16–

முதல்–அமைச்சர் விஜய் நேற்று முன்தினம் பிறப்பித்த உத்தரவில், பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத்தொகை திட்டத்தை மறுசீரமைப்பு செய்ய அரசுக்கு உரிய கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே மே மாதத்துக்கான கலைஞர் மகளிர் உரிமை பயனாளிகள் வங்கி கணக்கில் விரைவில் நேரடியாக வரவு வைக்கப்படும்' என்று தெரிவித்தார். அதன்படி 1.31 கோடி பெண்கள் வங்கி கணக்கில் ரூ.1,000 கலைஞர் உரிமைத்தொகை வரவு வைக்கப்பட்டது. இந்தநிலையில், அமைச்சர் நிர்மல்குமார் மதுரையில் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:–

தவெக எந்த வெர்ஷனும் கிடையாது புது வெர்ஷன். நிதி ஆதாரங்களை சரி செய்த பிறகே திட்டம் செயல்படுத்தப்படும். பட்ஜெட்டில் அறிவித்த பிறகே பெண்களுக்கு ரூ.2,500 வழங்கப்படும் என்றார்.




### ரவி மோகனுடன் பிரேக்-அப்? சென்னையை விட்டு போகும் கெனிஷா..!



ரவி மோகனின் தோழியாக வலம் வந்த கெனிஷா, தான் சென்னையை விட்டே கிளம்புவதாகவும் சமூக வலைதளங்களில் இருந்து வெளியேறுவதாகவும் பதிவை வெளியிட்டிருக்கிறார்.

இவர்,30 நிமிட வீடியோவை பதிவேற்றிய கெனிஷா, அதில் தான் ஏற்கனவே திருமணமாகி குழந்தையை இழந்தவர் என்றும், தனக்கு தாய்–தந்தை இல்லை என்றும், தனது உறவினர்களால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானவர் என்றும் தெரிவித்தார். மேலும், தனது கணவர் தன்னை அடித்ததால் 4 மாத கரு கலைந்ததாகவும் கூறினார். பாரில், ஒரு நாளைக்கு ரூ.500 வீதம் பாடி தான் இந்த நிலைக்கு வந்திருப்பதாக கூறிய அவர், அனைவரையும் வேறு வேலை இருந்தால் போய் பாருங்கள் என்றார்.

இறுதியாக சில பதிவுகளை அவர் இணையத்தில் வெளியிட்டிருக்கிறார். அதில் தான் தோற்றுவிட்டதாகவும், சென்னையிலிருந்து கிளம்புவதாகவும் கூறியிருக்கிறார்.

அதில், "ஏற்கனவே உலகம் தவறாக தீர்மானித்த ஒருவரை காப்பாற்ற முயன்று, என்னுள் இருந்த பல பகுதியை நான் இழந்துவிட்டேன். ஆனால் இப்போது ஒரு விஷயம் தெளிவாக புரிகிறது — நாடகத்திற்கே அடிமையான இந்த உலகில், நல்ல மனசுக்கு வாய்ப்பே கிடைப்பதில்லை" என்று தெரிவித்துள்ளார். தொடர்ந்து, "ஆன்லைன் புல்லிங், மன அழுத்தம், மாயை — இதற்காகத்தான் நான் விலகுகிறேன். இதனுடன், கடவுள் வெற்றி பெறும் வரை நான் இன்ஸ்டாகிராம் மற்றும் அனைத்து சமூக வலைத்தளங்களிலிருந்தும் வெளியேறுகிறேன்" என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனால், இவர் ரவி மோகனை பிரிந்து விட்டாரா ?என்கிற கேள்வி ரசிகர்களுக்கு எழுந்துள்ளது.

## வேலை வாய்ப்பு

### இந்திய ராணுவத்தில் 90காலியிடங்கள்; +2




நிறுவனத்தின் பெயர்: இந்திய ராணுவம்
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 90 10+2 தொழில்நுட்ப நுழைவுத் திட்டம் (TES–56) ஜனவரி 2027 பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 13.05.2026 அன்று 12:00 மணி
கடைசி தேதி: 12.06.2026 அன்று 12:00 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://joinindianarmy.nic.in/

## உஷார் மக்களே.. தொடங்கியது தென்மேற்கு பருவமழை!



சென்னை, மே. 16–

தமிழகத்தில் வெயில் கொளுத்தி எடுத்து வந்த நிலையில், கடந்த சில நாட்களாக பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது, வெயிலும் குறைவாக இருந்து வருகிறது. இந்த நிலையில், மே 16 சனிக்கிழமை அன்று தென்மேற்கு பருவமழை தொடங்கியதாக இந்திய வானிலை மையம் அறிவித்துள்ளது. மே 17 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வரை பெரும்பாலான இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தென்மேற்கு பருவமழை தெற்கு வங்கக்கடலின் சில பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகள், அந்தமான் மற்றும் நிகோபார் தீவு பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் துவங்கக்கூடும்.

16–05–2026: விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, தேனி மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும். தென் தமிழகம் மற்றும் கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் லேசான மழை பெய்யக்கூடும்.

17–05–2026: திண்டுக்கல், தேனி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

18–05–2026: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

19–05–2026: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

20–05–2026 மற்றும் 21–05–2026: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# நீட் வினாத்தாள் கசிவு வழக்கில் பகீர் பின்னணி!

புதுடெல்லி, மே. 16–

2025ஆம் ஆண்டு ராஜஸ்தானில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் நீட் தேர்வில் வெற்றி பெற்று அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்தனர். இது அப்போது மிகப்பெரிய செய்தியாகப் பேசப்பட்டது.

2026 நீட் தேர்வின் அசல் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள் கசிந்ததை தொடர்ந்து தேர்வு ரத்து செய்யப்பட்ட நிலையில் இந்த குடும்பத்தின் மோசடி அம்பலமாகி உள்ளது.

2026, மே 3 தேர்வு நடைபெற்ற நிலையில் அதற்கு சில தினங்கள் முன் வினாத்தாள் கசிந்துள்ளது. அந்த மாதிரி தாளில் அசல்




தேர்வில் வேதியியலில் கேட்கப்பட்ட 45 கேள்விகளும், உயிரியலில் கேட்கப்பட்ட 90 கேள்விகளும் அப்படியே பொருந்தி இருந்தது. நீட் வினாத்தாள் கசிவு வழக்கில் ராஜஸ்தானை சேர்ந்த தினேஷ் பிவால், அவரது சகோதரர் மாங்கிலால் மற்றும் மருமகன் விகாஸ் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களே அசல் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாளை ராஜஸ்தான் பயிற்சி மையங்களுக்கு விற்றவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

மாங்கிலாலின் மகன் சவாய், மகள் பிரகதி, தினேஷின் மகள் குஞ்சன், மங்கிலாலின் மூத்த சகோதரரின் மகள்களான கன்ஷியாம் பாலக் மற்றும் சோனியா ஆகிய ஐவரும் கடந்த ஆண்டு நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று அரசுக் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர்.

இவர்களின் முந்தைய தேர்வு மதிப்பெண்கள் குறைவு என்றபோதும் 2025 இல் அதிக மதிப்பெண்களின் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதன் மூலம் 2025 நீட் தேர்விலும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் முறைகேடு செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

# ஸ்விகி, ஸொமேட்டோ ஊழியர்கள் வேலைநிறுத்தம்!

சென்னை, மே. 16–

பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஸ்விகி, ஸொமேட்டோ ஊழியர்கள் (மே 16) பகல் 12 மணி முதல் மாலை 5 மணி வரை வேலை நிறுத்த போராட்டத்தை அறிவித்து உள்ளனர். நாடு முழுதும் பெட்ரோல், டீசல் விலை, 4 ஆண்டுக்கு பின் உயர்த்தப்பட்டுள்ளது. குறிப்பாக லிட்டருக்கு டீசல் விலை, 3.11 ரூபாய், பெட்ரோல், 3.14 ரூபாய் உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு தங்களை நிதி நெருக்கடிக்கு தள்ளுவதாக ஸ்விகி, ஸொமேட்டோ நிறுவனத்தில் பணிபுரியும் தற்காலிக பணியாளர்கள் தெரிவித்தனர்.

ஸ்விக்கி, சோமேட்டோ, ஓலா போன்ற தளங்களில் பணி புரியும் ஊழியர்கள் இன்று (மே 16) பகல் 12 மணி முதல் மாலை 5 மணி வரைவேலை நிறுத்த போராட்டத்தை அறிவித்துள்ளனர். இது குறித்து கிக் மற்றும் பிளாட்பார்ம்




சேவைத் தொழிலாளர் சங்கம் (GIPSWU) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: விலைவாசி உயர்வு மற்றும் பெட்ரோல் விலை உயர்வால் மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு ஏற்ற சலுகைகள் வழங்க வேண்டும்.

பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஸ்விகி, ஸொமேட்டோவில் பணிபுரியும் தற்காலிக பணியாளர்கள் இன்று மதியம் 12 மணி முதல் 5 மணி வரையில் தங்கள் சேவைகளை நிறுத்திக் கொண்டு ஸ்ட்ரைக்கில் ஈடுபட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து தொழிற்சங்கத்தினர் கூறியதாவது:

இருசக்கர வாகனங்களை நம்பி தங்களின் அன்றாட வருமானத்தை ஈட்டும் 1.2 கோடி தற்காலிக பணியாளர்கள் பெட்ரோல், டீசல் விலை உயர்வால் கடுமையாக பாதிப்பை சந்திக்க நேரிடும். இந்த விலை உயர்வை ஸ்விகி, ஸொமேட்டோ உள்ளிட்ட நிறுவனங்களில் பணிபுரியும் டெலிவரி ஊழியர்களால் தாங்கி கொள்ள முடியாது.

அதிகரித்து வரும் எரிபொருள் செலவால் தொழிலாளர்கள் வருமானத்தை ஈட்ட முடியாமல், பல தொழிலாளர்கள் இத்துறையை விட்டு வெளியேறும் நிலை உருவாக லாம் என தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது. தற்காலிகப் பணியாளர்களாக பணிபுரியும் பெண்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

வானிலை மற்றும் கடும் போக்குவரத்து நெரிசலுக்கு மத்தியில் தினமும் 10 முதல் 14 மணி நேரம் வரை டெலிவரி வேலையை பெண்கள் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**நிடி ஆயோக் கணிப்பு!**

ஆன்லைன் நிறுவனங்களில் டெலிவரி செய்யும் ஊழியர்களாக பணிபுரிந்து வருபவர்களின் எண்ணிக்கை 2020–2021ல் 77 லட்சமாக இருந்தது. இது 2029–2030ம் ஆண்டிற்குள் 2.3 கோடியை தாண்டும் என நிடி ஆயோக் கணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கட்சியில் பிளவு: த.வெ.க., பக்கம் தாவும் அ.தி.மு.க.,வினர்!

ஈரோடு, மே. 16–

அ.தி.மு.க.,வில் பிளவு ஏற்பட்டதால், அக்கட்சி நிர்வாகிகள் பலர், ஆளுங்கட்சியான த.வெ.க., பக்கம் தாவி வருகின்றனர்.

அ.தி.மு.க., பொதுச் செயலர் பழனிசாமி அணி மற்றும் முன்னாள் அமைச்ச ர்கள் சண்முகம், வேலுமணி அணி என இரண்டு பிரிவாக செயல்படுகிறது.

வேலுமணி அணியை சேர்ந்த, ஈரோடு மாநகர் மாவட்ட அ.தி.மு.க., செயலர் ராமலிங்கம் நீக்கப்பட்டார். இந்நிலையில், அவர்



தலைமையில், ஈரோடு பகுதி அ.தி.மு.க., நிர்வாகிகள், அமைச்சர் செங்கோட்டையன் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்.

இதுபோல, தி.மு.க., தொண்டரணி மாநில இணை செயலர் காயத்ரி சீனிவாஸ், அமைச்சர் செங்கோட்டையனை சந்தித்து, த.வெ.க.,வில் இணைந்தார். அவருடன் தி.மு.க, பகுதி செயலர், ஒன்றிய செயலர்கள் என பலர் த.வெ.க.,வில் இணைந்து உள்ளனர்.

இதற்கிடையே, தமிழகத்தில் ஆளுங்கட்சியாக த.வெ.க., உள்ளதால், உள்ளாட்சி தேர்தலை மனதில் வைத்து, திருப்பூரில் உள்ள, தி.மு.க. – அ.தி.மு.க. – பா.ஜ. உள்ளிட்ட பிரதான கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள், முன்னாள் கவுன்சிலர்கள் உள்ளிட்டோர், த.வெ.க–வில் இணைய தொடங்கியுள்ளனர்.

# விஜய் பாணியில் முன்னாள் முதல்வரை சந்தித்து வாழ்த்து பெற்ற புதிய கேரள முதல்வர்!

திருவனந்தபுரம், மே. 16–

தமிழக முதலமைச்சர் விஜய் பாணியில், கேரள முன்னாள் அமைச்சர் பினராயி விஜயனை புதிய முதலமைச்சர் வி.டி.சதீஷன் சந்தித்துள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளாக இரு கட்சியினரும் கடுமையாக விமர்சித்து வந்த நிலையில் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

இதற்கிடையே, இந்த பதவியேற்பு விழாவில் மற்ற மாநில காங்கிரஸ் முதலமைச்சர் உடன் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்யும் பங்கேற்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# பிரேக்-அப்? ரவி மோகன் பரபரப்பு பேட்டி!

சென்னை, மே. 16–

மனைவி ஆர்த்தியுடன் விவாகரத்து கிடைக்கும் வரை சினிமாவில் நடிக்கப்போவதில்லை என நடிகர் ரவி மோகன் அறிவித்துள்ளார்.

தோழி கெனிஷா சென்னையைவிட்டு வெளியேறுவதாக அறிவித்த நிலையில் நடிகர் ரவிமோகன் செய்தியாளர்களை சந்தித்து பேசி வருகிறார். அப்போது அவர் கூறியதாவது:–

தேவையில்லாத அவமானங்களை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என் குடும்ப த்தினரை பற்றி அவதூறாக பேசினாலோ சீண்டினாலோ சும்மா இருக்க மாட்டேன்.



என் குழந்தைகள் மீதான எனது பாசத்தை பற்றி கேள்வி கேட்காதீர்கள். எனது குழந்தைகளை கூட பார்க்கவிடுவதில்லை. பாசத்தை பற்றி என்னிடம் பேசாதீர்கள். விவாகரத்து கிடைக்கும் வரை நான் நடிக்கப்போவதில்லை. எனது படங்கள் திரைக்கு வராது.

சாதுவாக இருந்த என்னை சிலர் சீண்ட முயற்சிக்கின்றனர். 95 சதவீதம் எனது படங்கள் வெற்றிபெற்றுள்ளன. என்னை விமர்சிப்பவர்கள் முன் இதை சொல்வதில் தவறில்லை. பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு படங்களில் நடித்துள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

# அமெரிக்க சிஐஏ இயக்குநர் கியூபா பயணம்: கம்யூ., ஆட்சிக்கு விரைவில் முடிவு!

கியூபா, மே. 16–

இருளில் மூழ்கியுள்ள கியூபாவிற்கு அமெரிக்க சிஐஏ இயக்குநர் ஜான் ராட்க்ளிப் பயணம் மேற்கொண்டார். அங்கு விரைவில் கம்யூ., ஆட்சிக்கு முடிவுக்கு கொண்டுவர முடிவு செய்யப்பட்டு உள்ளது.

கரீபியன் தீவு நாடுகளில் ஒன்றான கியூபாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியை கவிழ்க்க அமெரிக்கா 50 ஆண்டுகளுக்கு மேலாக முயற்சி மேற்கொண்டு வருகிறது. சோவியத் யூனியன் இருந்தவரை கியூபாவுக்கு உதவிகளை வழங்கி வந்தது. அதற்குப் பின் வெனிசுலா உதவிகளை வழங்கியது. வெனிசுலாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், கியூபாவுக்கு உதவிகளை அந்த நாடு முற்றிலும் நிறுத்திவிட்டது. இதனால் அன்றாட தேவைகளுக்கு கூட எரிபொருள் இல்லாமல் கியூபா நாட்டு மக்கள் திணறி வருகின்றனர்.

அந்நாட்டில் பெரும் மின்வெட்டு நிலவுகிறது. தலைநகரான ஹவானாவில் தொடரும் மின்வெட்டை கண்டித்து மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் மின்வினியோகம் தடைபடுவதால் மக்கள் கோபம் அடைந்துள்ளனர்.

அமெரிக்கா விதித்துள்ள தடைகளால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மின் வினியோகம் தடைபட்டுள்ளதாக கியூபா அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். கியூபாவின் எரிசக்தி துறை அமைச்சர் வின்செண்ட் டி லா ஒ லெவி நாட்டில்



எரிபொருள் முற்றிலும் இல்லை என தெரிவித்தார். மக்கள் கரி மற்றும் விறகைப் பயன்படுத்தி சமைக்க துவங்கி உள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்க உளவு அமைப்பான சிஐஏ இயக்குநர் ஜான் ராட்க்ளிப் கியூபாவிற்கு பயணம் மேற்கொண்டார். இதை இரு நாடுகளுமே வெளிப்படையாக அறிவித்துள்ளன. அங்கு அந்நாட்டு உயர் அதிகாரிகளையும், முன்னாள் அதிபர் காஸ்ட்ரோவின் பேரனான கில்லெர்மோ ரோட்ரிகஸ்ஜ சந்தித்துப் பேசியுள்ளார்.

நீண்ட காலமாக இருநாடுகளுக்கும் இடையே மோதல் நிலவி வருகிறது. கியூபாவை கைப்பற்றுவோம் என அதிபர் டிரம்ப் பிடிவாதமாக இருக்கும் சூழலில், இந்த உயர் அதிகாரிகள் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

ஹவானாவில் நடந்த அந்நாட்டு உள்துறை அமைச்சர் லாசரோ அல்வாரெஸ் கசாஸ் மற்றும் உளத்துறை அதிகாரிகளை சந்தித்து அமெரிக்க சிஐஏ இயக்குநர் ஜான் ராட்க்ளிப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

கியூபா தனது கொள்கைகளில் அடிப்படை மாற்றங்களைக் கொண்டுவந்தால் மட்டுமே, பொருளாதார மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் அமெரிக்கா ஆக்கபூர்வமாக ஈடுபட தயாராக இருப்பதாக அதிபர் டிரம்பின் முடிவை கியூபா அதிகாரிகளிடம் ஜான் ராட்க்ளிப் தெரிவித்தார். இந்த பேச்சுவார்த்தைகளில் இருந்து கியூபாவில் சுமூகமான ஆட்சி மாற்றம் விரைவில் ஏற்படும் என்பது உறுதியாகி உள்ளது.

# அடுத்தகட்டத்துக்கு சென்ற அ.தி.மு.க., வேலுமணி அணி!

சென்னை, மே. 16–

அ.தி.மு.க.,வில் ஏற்பட்டுள்ள உட்கட்சிப் பூசல்கள் தீர, முன்னாள் அமைச்சர் சண்முகத்தின் ஆதரவாளர்கள், சிறப்பு ஹோமம் நடத்தி திருஷ்டி கழித்தனர். அ.தி.மு.க., பிளவுபட்ட நிலையில், கட்சி ஒன்றாக வேண்டும் எனவும் பழைய செல்வாக்கை பெறவும் வேண்டி, கட்சி நிர்வாகிகள், ஆன்மிக வழிபாடுகளில் இறங்கியுள்ளனர். இந்நிலையில், கட்சி நலன் கருதியும், தடைகள் நீங்கவும், முக்கிய நிர்வாகிகள்



இணைந்து, சென்னை எம்.ஆர்.சி., நகரில், முன்னாள் அமைச்சர் ஒருவர் வீட்டில் நேற்று முன்தினம் அதிகாலை, ஹோமம் மற்றும் சிறப்பு வழிபாடு நடத்தினர். அங்கு, கட்சியில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளை சரிசெய்ய, பல்வேறு ஆலோசனைகள் நடந்து வருகின்றன.

மேலும், கட்சிக்கு ஏற்பட்டுள்ள திருஷ்டி மற்றும் தடைகள் விலக, நேற்று முன்தினம் இரவு 10:00 மணி அளவில், சி.வி.சண்முகம், வேலுமணி ஆதரவு எம்.எல்.ஏ.,க்களுக்கு, தேங்காய், எலுமிச்சை சுற்றுவது உட்பட, திருஷ்டி கழிக்கும் செயல்கள் அறங்கேறின.

அ.தி.மு.க.,வில் உள்ள அதிருப்தி எம்.எல்.ஏ.,க்கள் எண்ணம் ஈடேற வேண்டும்; கட்சி, அவர்கள் கட்டுப்பாட்டிற்கு வர வேண்டும் என்பதற்காக, இந்த பரிகாரம் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

# அமைச்சருக்காக நடை அடைப்பில் மாற்றம்; திருப்பரங்குன்றம் கோவிலில் புதிய சர்ச்சை!

திருப்பரங்குன்றம், மே. 16–

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் த.வெ.க., அமைச்சர் நிர்மல் குமார் நேற்று தரிசனம் செய்தார். அவருக்காக மதியம் கோயில் நடை அடைப்பு நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டதால் பக்தர்கள் அதிருப்தியடைந்தனர்.

கோயிலில் வழக்கமாக மதியம் 12:30 மணிக்கு உச்சிகால பூஜை துவங்கும். மதியம் 12:45 மணிக்கு கோயில் ராஜகோபுரத்தின் கீழ் உள்ள மண்டபத்தில் உள்ள பெரிய கதவுகள் சாத்தப்படும்.

பக்தர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். விழா காலங்களில் மட்டும் மதியம் நடை சாத்தப்படாமல் பக்தர்கள் அனுமதிக்கப்படுவர். பக்தர்கள் கூட்டம் அதிகம் உள்ள நாட்களிலும், திருமண நாட்களிலும் வழக்கம் போல் மதியம் 12:45 மணிக்கு மேல் பக்தர்கள் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அதற்கு முன்பே கோயிலுக்குள் சென்ற பக்தர்கள் தரிசனம் முடித்து வெளியேறிய பின் நடைசாத்தப்படும்.

சென்னையிலிருந்து நேற்று காலை மதுரை வந்த அமைச்சர் நிர்மல் குமார் திருப்பரங்குன்றம் தொகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். அவர் நேற்று மதியம் 12:55 மணிக்கு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தரிசனம் செய்ய வந்தார். கோயில் முன் கட்சியினர் அவரை வரவேற்றனர். கோயிலுக்குள் சென்ற அமைச்சருக்கு கோயில் சார்பில் பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டது. துணை கமிஷனர் ஞானசேகரன், அறங்காவலர்கள் சண்முகசுந்தரம், ராமையா, கண்காணிப்பாளர் சத்தியசீலன் வரவேற்றனர். பின் அமைச்சர், ஆதரவாளர்கள் 50க்கும் மேற்பட்டோருடன் மூலஸ்தானம் சென்று தரிசனம் செய்து திரும்பினார்.



அமைச்சர் நிர்மல் குமார் நேற்று மதியம் 1:00 மணியளவில் கோயிலுக்குள் சென்றார். மதியம் 1:06 மணிக்கு மூலஸ்தானத்தில் ஆதரவாளர்களுடன் தரிசனம் முடித்து மதியம் 1:15 வெளியில் வந்தார். அதன் பின்பே கோயில் நடை சாத்தப்பட்டது. வழக்கமாக பக்தர்கள் மூலஸ்தானத்தில் தரிசனம் முடித்து மடப்பள்ளி மண்டபம், சஷ்டி மண்டபம் வழியாக வெளியில் அனுப்பப்படுவர். அமைச்சருக்காக பெரிய நிலை கதவு திறக்கப்பட்டு முன் பக்க வாசல் வழியாக வெளியே அனுப்பப்பட்டார்.

அமைச்சர் மூலஸ்தானத்தில் தரிசனம் செய்த வீடியோ சமூக வலைதளங்களிலும் வைரலாக பரவியது. பக்தர்கள் கடும் அதிருப்திக்குள்ளாகினர்.

# மியான்மரில் ஒரே நாளில் அடுத்தடுத்து இரண்டு முறை நிலநடுக்கம்...!

நேபிடா, மே. 16–

மியான்மரில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. காலை 6.40 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.0 ஆக பதிவாகி உள்ளது என தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. மியான்மரில் 100 கிலோமீட்டர் ஆழத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் 22.977 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 94.305 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இதனையடுத்து காலை 8.13 மணியளவில் ரிக்டரில் 3.5 அளவில் இரண்டாவது முறையாக நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு நில அதிர்வால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், பெரியகுளம்.**

ந.க. எண்: 9855/2025/ அ–7

அ. செல்வராமு, த/பெ. ரா.அழகர்சாமி, 6–வது வார்டு, தாமரைக்குளம், பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம்.

– மனுதாரர்

உயர்திரு செயல் அலுவலர் அவர்கள், பேரூராட்சி அலுவலகம் தாமரைக்குளம்.

_ எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாராகிய நான் எனது தாத்தா அ.ராமன் என்பவர் மேற்படி முகவரியில் கடந்த 12.07.2000 ஆம் தேதி இறந்ததை எதிர் மனுதாரர் அலுவலக இறப்பு பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் சமூக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.. இவற்றில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் 15 தினங்களுக்குள் சமூக நீதிமன்றத்தில் நேரிலோ, அல்லது சட்டம் படித்த வழக்கறிஞர்கள் மூலமாகவோ, ஆஜராகி தங்களது மறுப்பை தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என இந்த அறிவிப்பு மூலம் அறிவிக்கப்படுகின்றது.

மனுதாரர்

**அ.செல்வராமு.**

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020